உ

கடவுள் துணை.

தேவராய சுவாமிகள் அருளிச்செய்த

கந்தர் சஷ்டி கவசம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதறாஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதறாஸ் என். சி.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, **போஸ்டைச்**சேர்ந்த கானத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. **வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ்**, தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும். அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்டியார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் **அடியிற்கண்டிருக்கும் கம்பேனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.**

டி, கோபால் அண்டு கோ.

கோல்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.



உ

சுப்பிரமணியர் துணை.

கந்தர் சஷ்டி கவசம்.

காப்பு.

நேரிசை-வெண்பா.

துதிப்போர்க்குவல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச்செல்வம்பலித்துக-கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடு நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

நூல்.

அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்

கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா யெண்டிசை யேற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோநம
நிபவ சரணஹ நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னையாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங்·கிலியும் அடைவுடன் சௌவும்

உய்யொளி சௌவும் கிளரொளி யையும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யைய்யும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியு நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பலபூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேண் முந்து
என்றனை யாளு மேரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவி நோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிரா மிறையவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினை காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேள் காக்க
வடிவே லிருதோள் வளம்பெற காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருவேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அதைவேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பெருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருவேல் காக்க
கைகளிரண்டுங் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா ழடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வயிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்
காக்க காக்க கனவேல்
நோக்க நோக்க நொ
தாக்க தாக்க தடையிற்
பார்க்க பார்க்க பா
பில்லி சூனியம்
வல்ல பூதம் வ
அல்லற் படு
பிள்ளைக டி
கொள்ளி

பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மன்னரும்
கனபூசை கொள்ளுங் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரருஞ் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
னே பலபல சத்துடன்
னை தனையும்
ட்டியப் பாவையும்
டன் சோறும்
ப் போக்கும்
ந்து குலைந்திட
ங்கிட
ங்கி
ட

படியினின் முட்டப் பாசக்கயிற்றால்
கட்டுட னங்கங் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெறி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியு நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியு மினித்தொடர்ந் தோட
தேளும் பாம்புஞ் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மஞ் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடவிப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடைவாழை

கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியு மென்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரர் பதியை
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பாகடம்பனை
இடும்பனை யழித்த இனியவென் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேன் முருகா
பழனிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா

சரமா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுன்னைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனை
பாடினேன் ஆடினேன் பரவச மாக
நாடினேன் நாடினே னாவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியி லணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தா சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவராயன் பகர்ந்ததைக்
காலையின் மாலையின் கருத்துடனே நாளும்
ஆசா ரத்துடனே அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக்குளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்வர் செயல் தந்தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்

பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்வம்
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூர பத்மாவை துணித்தகை யதனால்
இருபத் தேழவர்க் குவந்தவமு தளித்த
குருபரன் பழனி குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத்தாட்கொள என்றன் துயரம்
மேவிய வடிவுறும் வேலா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரஹண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டிகவ்சம் முற்றிற்று.

விளம்பரம்.

அற்புத பூலோகரம்பை கதை.

இதனுல் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொல்லக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது எற்படுத்தியிருக்கும (அற்புதபூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவது மன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச் செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகாஅற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் வீடப்பட்டது. கிளேஸகாகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.